

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | ஜனவரி 23, 2020 | புரட்சி 19 | முழக்கம் 02 | விலை: ரூ.3.00


# ‘மன்னிப்புக் கேட்க மாட்டேன்’ ரஜினியின் ஆணவப் பேட்டி

***பெரியாரை இழிவாகப் பேசிய நடிகர் ரஜினிகாந்த் ‘மன்னிப்புக் கேட்க மாட்டேன்’ என்று ஆணவத்துடன் பேட்டி அளித்துள்ளார்.***

ஆன்மிக அரசியல் கட்சியைத் தொடங்கப் போவதாக அறிவித்துள்ள நடிகர் ரஜினிகாந்த் முகத்திரை கிழியத் தொடங்கியிருக்கிறது. பார்ப்பனர்கள் சொல்லிக் கொடுக்கும் பாடத்தை மேடைகளில் உளறிக் கொண்டிருக்கிறார்.

‘துக்ளக்’ பத்திரிகையை கையில் வைத்திருப்பவர்கள் அறிவாளிகள் என்றார். அது அக்கிரகாரத்துக்காரர்களுக்கான அடையாள அட்டையே தவிர, அறிவாளிகளுக்கான அடையாளம் அல்ல. ஆனாலும் அக்கிரகாரவாசிகள் சொல்லித் தருவதை அப்படியே வாந்தி எடுக்கிறார்.

‘துக்ளக்’ ஏட்டின் பெருமையைப் பறைசாற்ற சில சம்பவங்களைப் பட்டியலிட்டார் ரஜினி. 1971ஆம் ஆண்டு சேலத்தில் பெரியார் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில், “ஸ்ரீராமச் சந்திர மூர்த்தி, சீதை சிலைகள் உடை இல்லாமல் செருப்பு மாலை போட்டு கொண்டு வரப் பட்டது; அந்தப் படத்தை சோ ‘துக்ளக்’ பத்திரிகையில் வெளியிட்டார். அதனால் முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி அந்த பத்திரிகைக்குத் தடை போட்டார். இந்தியா முழுவதும் சோ பிரபலம் ஆனார்” என்று அவர் பேசினார்.

“இது உண்மையல்ல; ராமன், சீதை சிலை செருப்பு மாலை போட்டு நிர்வாணமாக எடுத்து வரப்படவில்லை. ‘ஜன சங்க’த்தைச் சார்ந்த (முன்னாள் பா.ஜ.க.) சிலர், அந்த ஊர்வலத்துக்கு எதிராக கருப்புக் கொடி காட்டினர். அப்போது பெரியாரை நோக்கி செருப்பை வீசினார்கள். செருப்பு பெரியார் மீது விழாமல் கூட்டத்தில் விழுந்தது. ஆத்திரமடைந்த திராவிடர் கழகத்தினர் ஊர்வலத்தில் ‘இராமன்’ பிறப்பைப் புராண ஆதாரங்களுடன் விளக்கி எடுத்து வரப்பட்ட படத்தில் அடித்தனர்” என்று நடந்த சம்பவத்தை பெரியார் இயக்கத் தோழர்கள் விளக்கினர்.

பெரியார் இயக்கத்தைக் கேவலப்படுத்த வேண்டும் என்ற தீய உள்நோக்கத்தோடு நடிகர் ரஜினிகாந்த் பேசிய பேச்சுக்கு பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். சமூகத்தில் அமைதியைக் குலைக்கும் வகையில் பேசிய அவரது அவதூறு பேச்சுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி காவல் நிலையங்களில் புகார் மனு தருமாறு திராவிடர் விடுதலைக் கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வேண்டுகோள் விடுத்திருந்தார். தமிழகம் முழுதும் 50க்கும் மேற்பட்ட ஊர்களில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் காவல் நிலையங்களில் புகார் மனு அளித்தனர். காவல்துறை நடவடிக்கை எடுக்காவிடில் ரஜினிகாந்த் வீடு முற்றுகையிடப்படும் என்றும் திராவிடர் விடுதலைக் கழகம் அறிவித்தது. அதன்படி ஜன. 22, 2020 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் ரஜினியின் வீட்டை முற்றுகையிடும் போராட்டத்தை அறிவித்தது. இதற்கிடையே ரஜினிகாந்த், ஜன. 21 அன்று பத்திரிகையாளர்களை சந்தித்து, ‘பெரியார் குறித்து தான் பேசிய கருத்துகளுக்கு வருத்தமோ மன்னிப்போ கேட்கப் போவதில்லை” என்று ஆணவத்துடன் தெரிவித்தார்.

1971இல் நடந்த சேலம் ஊர்வலத்தில் ராமன் சிலை நிர்வாணமாக செருப்பு மாலை போட்டு எடுத்து வரப்பட்டது என்று தான் பேசியதற்கு ஆதாரமாக 2017ஆம் ஆண்டு வெளி வந்த ‘அவுட் லுக்’ பத்திரிகையின் பக்கங்கள் சிலவற்றை நகல் எடுத்து வந்திருந்தார். கார்ட்டூனிஸ்ட் பாலா வரைந்த ஒரு கார்ட்டூனுக்காக கைது செய்யப்பட்டதை யொட்டி ‘அவுட் லுக்’கில் எழுதப்பட்ட கட்டுரை. அந்தக் கட்டுரையில் கீழ்க்கண்ட வரிகள் இடம் பெற்றிருந்தன:

“1971ஆம் ஆண்டு ‘துக்ளக்’ ஏட்டின் ஆசிரியர் சோ மீது தி.மு.க.வும், அதன் தலைவர் கருணாநிதியும் முதல் தாக்குதலை நடத்தினர். திராவிடர் கழகம் நடத்திய ஊர்வலத்தில், இந்து கடவுள்கள் ராமன், சீதையை நிர்வாணமாக சித்தரித்து செருப்பு மாலை போடும் புகைப் படங்கள் எடுத்து வரப்பட்டதை ‘துக்ளக்’ பத்திரிகை வெளியிட்டது” என்று ‘அவுட் லுக்’ பத்திரிகை அந்தக் கட்டுரையில் உண்மைக்கு மாறாக குறிப்பிட்டுள்ளது. இதுதான் ரஜினி காந்த் தனது பேச்சு சரியானது என்பதற்குக் காட்டிய ஆதாரம். அந்த நகலைக்கூட செய்தியாளர்களிடம் அவர் வழங்கவில்லை. அந்தப் பகுதியை படித்துக் காட்டவும் இல்லை. ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சி நடத்திக் காட்டுவது போல் கையில் இரண்டு காகிதங்களை வைத்துக் கொண்டு அப்படியே உயர்த்திக் காட்டி பேட்டியை முடித்துக் கொண்டு விட்டார்.

தனது ஆதாரம் வலிமையானது என்றால் அதை நகல் எடுத்து ஊடகவியலாளர்களுக்கு வழங்கியிருக்கலாம் அல்லவா? அது வலுவற்ற ஆதாரம் என்பது அவருக்கு ‘பாடம்’ நடத்தி ‘படி’ எடுத்துத் தந்த ‘அவாள்’களுக்கு நன்றாகவே தெரியும். எனவே அவர்கள் சொல்லித் தந்தபடி பேட்டியை முடித்துக் கொண்டார்.

இப்போது நடிகர் ரஜினிகாந்திடம் சில கேள்விகளைக் கேட்கிறோம்:

- ‘துக்ளக்’ ஏடு நிர்வாண ராமன் மற்றும் சீதை சிலைகளுடன் செருப்பு மாலை போட்ட படத்தை வெளியிட்டது என்று தான் ரஜினி பேசினார். அது உண்மை என்றால், அந்த ‘துக்ளக்’ ஏட்டை ஏன் ஆதாரமாகக் காட்டவில்லை? குருமூர்த்தி தானே இப்போது ‘துக்ளக்’ ஆசிரியர்? அவர் ‘துக்ளக்’ கருவூலத்திலிருந்து அதை எடுத்துத் தந்திருக்க மாட்டாரா? ஆனால் அவர்களால் அதை ஆதாரமாகக் காட்ட முடியாது. காரணம் அப்படி ராமன் சிலையை நிர்வாணமாக செருப்பு மாலை போட்டு வந்த படம் ஏதும் ஊர்வலத்தில் எடுத்து வரப்படவில்லை. எனவே ‘துக்ளக்’ வெளியிட்ட படங்களிலும் அப்படி ஒரு காட்சி இல்லை. ரஜினி ஆதாரமாகக் காட்டிய ‘அவுட்லுக்’ ஏட்டிலும் அப்படி ஒரு படம் இல்லை.
- ‘அவுட் லுக்’ நம்பத் தகுந்த பத்திரிகை என்பதற்காக மற்றொரு பொய்யையும் தனது ‘பார்ப்பன வாத்தியார்கள்’ கூறியபடி திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். ‘இந்து குழும’த்திலிருந்து வெளி வரும் பத்திரிகை ‘அவுட் லுக்’ என்கிறார். ‘அவுட் லுக்’ பத்திரிகைக்கும் ‘இந்து குழும’த்துக்கும் ஒரு தொடர்பும் இல்லை.
- இவையெல்லாம் மறக்க வேண்டிய நிகழ்வுகள் என்று பேட்டியில் ரஜினி கூறினார். மறக்க வேண்டிய நிகழ்வை, ஏன் துக்ளக் விழாவில் நினைவுபடுத்திப் பேசினார்?
- ஒரு பொய்யை பொறுப்பில்லாமல் பேசுவது; பிறகு உண்மை அம்பலமானவுடன் வேறு ஒரு பொய்யான ஆதாரத்தை முன் வைப்பது - இதுதான் ரஜினியின் ஆன்மிக அரசியலா?

‘ராமன்’ அரசியலை நோக்கி பார்ப்பனர்கள் ரஜினியை இழுத்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

பெரியார் எதிர்ப்பை - ரஜினியின் அடையாளமாக்கிட பார்ப்பனர்கள் காய் நகர்த்துகிறார்கள்.

மன்னிப்புக் கேட்க வேண்டாம் என்று எச். ராஜா கூறியதைக் கேட்டுக் கொண்டு தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிராக ரஜினி ஆணவத்தோடு பேசுகிறார்.

குருமூர்த்திகளும் எச்ராஜாக்களும் ரஜினியை இப்படியே வழி நடத்திக் கொண் டிருக்கட்டும். அப்போதுதான் ரஜினியின் உண்மை பார்ப்பனிய முகம் தமிழர்களுக்கு நன்றாகப் புரியும்! ●

## ரஜினிகாந்த் மீது நடவடிக்கைக் கோரி காவல் நிலையங்களில் கழகம் புகார்

***கழகத் தலைவர் கொளத்தூர் மணி 17.01.2020 அன்று வெளியிட்ட அறிக்கையின்படி தமிழகத்தில் பல்வேறு காவல் நிலையத்தில் கழகத்தின் சார்பாக வழக்கு பதிய வேண்டும் என்று மனு அளிக்கப்பட்டது. அவை பின்வருமாறு:***

சேலம் மாவட்டத்தில், ஏற்காடு, ஆத்தூர், சேலம் டவுன் (அன்னதானப்பட்டி), சேலம் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம், காக்காபாளையம், சங்ககிரி, எடப்பாடி, ஜலகண்டாபுரம், தாரமங்கலம், ஓமலூர் மேச்சேரி, நங்கவள்ளி, கருமலைக்கூடல், மேட்டூர், கொளத்தூர் உட்பட 15 காவல் நிலையங்களிலும், நாமக்கல் மாவட்டத்தில், குமாரபாளையம், பள்ளிபாளையம், திருச்செங்கோடு, இராசிபுரம் ஆகிய காவல் நிலையங்களிலும், கோவையில் காட்டூர், திருப்பூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், பொள்ளாச்சி, ஈரோடு, அம்மாபேட்டை, பவானி, திருச்சி, கும்பகோணம், உடுமலை துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், பழனி, திண்டுக்கல், தருமபுரி, விழுப்புரம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், காஞ்சிபுரம், சென்னை காவல் ஆணையர் அலுவலகம், மயிலாடுதுறை, வேலூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், தென்காசி பாவூர் சத்திரம் ஆகிய 50க்கும் மேற்பட்ட காவல் நிலையங்களில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

# ‘இந்து’ விரோதி யார்? : சங்பரிவாரங்கள் பதில் சொல்லட்டும்

பெரியாரும் பெரியார் இயக்கமும் இந்துக் கடவுள்களை ‘புண்படுத்துகிறார்கள்’ என்று பார்ப்பனர்கள், சங் பரிவாரங்கள் ஓயாது கூக்குரலிடுவது வழக்கமாகி விட்டது.

அவர்களிடம் நாம் சில கேள்விகளை முன் வைக்கிறோம். “பாரத தேசம் இந்துக்கள் தேசம்; இந்துக்கள் மட்டுமே இந்த மண்ணின் குழந்தைகள்; நாம் துவக்கமே இல்லாதவர்கள்; நமது மூலாதாரம் எது என்பது சரித்திர மேதைகளுக்கே தெரியவில்லை” - இதுதான் சங்பரிவாரங் களின் ‘இலட்சியம்’; ‘கொள்கை’.

இது உண்மை என்றால் நமது இந்துக் கடவுள்கள் ஏன் மண்ணின் குழந்தைகளான சக இந்துக்களைக் கொல்ல வேண்டும்? ‘இந்து’க்களை அவதாரம் எடுத்து வந்து ஏன் அழிக்க வேண்டும்?

- இராமன் - இராவணனை அழிக்கவே அவதாரம் எடுத்தான் என்கிறார்கள்! இராவணன் - சங்பரிவார் கொள்கைப்படி - இந்த மண்ணின் குழந்தையான இந்து தானே?
- இராமன் தன்னுடைய அரசாட்சியில் ‘சம்பூகன்’ என்ற ‘இந்து’ சூத்திரன், ‘பிராமணர்’களைப் புறக்கணித்து நேரடியாகவே கடவுளை வணங்கினான் என்பதற்காக ‘சம்பூகனை’ வெட்டி மரணதண்டனை வழங்கியதாக வால்மீகி இராமாயணம் கூறுகிறது. - சம்பூகன் யார்? அவனும் இந்து தானே?
- நரகாசுரன் என்ற அசுரன், ‘தேவர்’களை எதிர்த்தான் என்பதற்காக மகாவிஷ்ணு அவதாரம் எடுத்து வந்து நரகாரசுனை அழித்தான் என்றும், அந்த அழிப்பை தீபாவளியாகக் கொண்டாடி மகிழுங்கள் என்றும் கூறுகிறீர்களே!

  நரகாசுரன் யார்? அவனும் இந்து தானே? ஓர் இந்துவை இந்துக் கடவுள் கொன்று ஒழித்ததை விழாவாகக் கொண்டாடச் சொல்கிறீர்களே! இதற்குப் பெயர் என்ன? இந்து படுகொலை நாள் கொண்டாட்ட திருவிழா நாளா?
- ‘தேவர்’களை எதிர்த்த இரணியனை சிங்க உருவம் எடுத்து, நரசிம்ம அவதாரமாக வந்து மகாவிஷ்ணு கொன்றானே!

  அந்த இரணியன் யார்? அவனும் இந்து தானே? பாரதத் தாயின் புதல்வன் தானே?
- ஏகலைவன் கட்டை விரலை துரோணாச்சாரி குருதட்சணையாகக் கேட்டதாக மகாபாரதக் கதை கூறுகிறதே;

  ஏகலைவன் யார்? அவனும் ஒரு இந்து தானே? இந்துக் கடவுள் ஓர் இந்துவை முடமாக்கலாமா?
- பாண்டவர்களும் இந்துக்கள் தான்; கவுரவர்களும் இந்துக்கள் தான் - சங்பரிவார் வாதப்படி. இருவருக்குமிடையே யுத்தத்தைத் தூண்டி இந்துக்களின் ஒரு பெரும் “சத்திரிய”க் கூட்டம் செத்து மடியக் காரணமாக இருந்தானே பகவான் கிருஷ்ணன் - இது இந்துப் படுகொலை அல்லவா? கிருஷ்ணன் இந்துக் காவலனா?
- இந்துக் கடவுள்கள் ‘சம்ஹாரம்’ என்ற பெயரில் இந்துக் கடவுள்கள் அழித்தொழித்தது - சக ‘இந்து’க்களைத் தானே?
- காந்தி என்ற ‘இந்து’வை ‘கோட்சே’ என்ற ‘இந்து’ ஏன் சுட்டுக் கொன்றான்? இந்துக்கள் மீதான பாசமா?

- இந்துக் கடவுள்கள் எல்லாம் ‘சம்ஹாரம்’ - ‘அழித்தொழிப்பு’ வேலைகளைச் செய்தது எல்லாம் யாருக்கு எதிராக? முஸ்லிம்களுக்கு எதிராகவா? கிறித்தவர்களுக்கு எதிராகவா? சக இந்துக்களுக்கு எதிராகத் தானே!

இப்படி கடவுளின் பெயரால் நடந்த ‘இந்து’ ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான படுகொலைகளைத் தட்டிக் கேட்பது இந்து விரோதமா? அல்லது இந்துக்களை படுகொலை செய்தது இந்து விரோதமா?

பரிவாரங்களே, பார்ப்பனர்களே பதில் சொல்லுங்கள்!

# காந்தி கொலையுண்ட படங்கள் நினைவிடத்திலிருந்து அகற்றம்

காந்தி 1948ஆம் ஆண்டு கொல்லப்பட்ட பிறகு உடனடியாக எடுக்கப்பட்ட புகைப்படங்களை அகற்றியதாக காந்தியின் கொள்ளுப்பேரன் துஷார் காந்தி வேதனை தெரிவித்தார். தேசத் தந்தை குறித்த நினைவகமான காந்தி நினைவகத்திலிருந்து காந்தி சுடப்பட்ட பிறகு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அகற்றப்பட்டது குறித்து துஷார் காந்தி அரசைக் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பான ட்விட்டர் பதிவில் அவர், “அதிர்ச்சியடைந்தேன்! ஹென்றி கார்ட்டியர் பிரெஸானின் காந்தி கொலையுண்ட பிறகான புகைப்படங்கள் காந்தி நினைவகத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளன. பிரதான் சேவக்கின் உத்தரவின் பேரில் இந்த முக்கியப் புகைப்படங்கள் அகற்றப்பட்டுள்ளன. காந்தியைக் கொன்றவர்கள் வரலாற்று ஆதாரத்தை அழிக்கின்றனர். ஹே ராம்!” என்று ட்வீட் செய்து வேதனை வெளியிட்டுள்ளார்.

பிரதமர் மோடி தன்னை ‘பிரதான் சேவக்’ என்று அழைத்துக் கொண்டதையே துஷார் காந்தி தன் ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். காந்தி ஸ்மிருதியின் தலைவர் பிரதமர்தான், இதுவும் தர்ஷன் சமிதியும் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி அமைப்பாகும்.

இன்னொரு ட்வீட்டில் துஷார் காந்தி இந்தியில் குறிப்பிடும்போது, இந்தியா மாறுகிறதோ இல்லையோ, வரலாற்றை மாற்றும் முயற்சி நடைபெற்று வருகிறது என்று சாடினார். துஷார் காந்தியின் ட்வீட்டுக்கு பண்பாட்டு அமைச்சர் பிரஹலாத் சிங் படேல் பதிலளிக்கையில், விமர்சனங்களைக் கண்டு தான் அஞ்சவில்லை ஆனால் பொய்கள் பரப்பப்படுவது துரதிர்ஷ்டமானது என்றார். மேலும் துஷார் காந்தி தவறான தகவலை அளிக்கிறார், காந்தியின் இந்தப் புகைப்படங்கள் மங்கலாகி விட்டதால் டிஜிட்டலாக்கி திரையில் தெரியுமாறு செய்யப்பட்டுள்ளது என்றார்.

# 38 சதவீத மக்களிடம் பிறப்புச் சான்றிதழே இல்லை

நடுவண் அரசின் குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு, தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு சட்டங்கள் நாடு முழுவதும் கடும் எதிர்ப்பை சந்தித்துள்ளன. குடியுரிமை அற்றவர்கள் என மத சிறுபான்மை யினர்களை பிரித்து அவர்களை என்ன செய்யப்போகிறார்களோ என்ற அச்சமே இத்தகைய கடுமையான போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதற்கு காரணமாக உள்ளது. இந்நிலையில் இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 38 சதவீத குழந்தைகளிடம் பிறப்புச் சான்றிதழே கிடையாது என்பது அரசு புள்ளி விவரங்களின் மூலம் தெரிய வந்துள்ளது. கடைசியாக வெளியான தேசிய குடும்ப சுகாதார ஆய்வறிக்கை-4இன் படி 2015-16ஆம் ஆண்டு கணக்கின் அடிப்படையில் 5 வயதுக்குட்பட்ட 62.3% குழந்தைகளிடம் மட்டுமே பிறப்புச் சான்றிதழ் உள்ளது.

தேசிய குடிமக்கள் பதிவேட்டில் தங்கள் குடியுரிமையை நிரூபிக்க பிறந்த இடம், பிறந்த தேதியை உறுதிசெய்யும் ஒரு சான்றிதழ் வழங்க வேண்டும். 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வாக்காளர் அடையாள அட்டையும் இருக்காது, பள்ளிக்கல்வி சான்றுகளும் இருக்காது. எனவே பிறப்புச் சான்றிதழை தருவது மட்டுமே அவர்களுக்கான ஒரே வாய்ப்பு. ஏனெனில் அசாமில் தேசிய குடிமக்கள் பதிவேட்டிற்கு பிறப்புச் சான்றிதழ்தான் பொதுவாக கேட்கப்பட்டது. எனவேதான் அசாமில் குடியுரிமை அற்றவர்கள் என வரையறுக்கப்பட்ட 40 லட்சம் பேரில் பெரும் எண்ணிக்கையில் குழந்தைகளும் இருந்தனர். இப்படிப்பட்ட நிலையில் பிறப்புச் சான்று இல்லாத இந்த 38% குழந்தைகளையும் நடுவணரசு குடியுரிமை அற்றவர்கள் என தீர்மானித்து முகாம்களில் அடைத்து வைக்கப் போகிறதா என்ற கேள்வி நமக்கு எழுகிறது. இந்த குழந்தைகளில் வெறும் இஸ்லாமியர்கள் மட்டும் இல்லை. இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் என அனைத்து மதத்தை சார்ந்தவர்களுமே உள்ளனர்.

பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் 1969இன் படி எல்லோருடைய பிறப்பையும், இறப்பையும் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். ஆனால் இதற்கான முறையான கட்டமைப்பு வசதிகள் கூட பல மாநிலங்களில் இல்லை. 2017ஆம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவின் பிறப்பு பதிவு விகிதம் 84.9% ஆக உள்ளது. 20 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மட்டும்தான் பிறப்பு இறப்பு பதிவுக்கான சிவில் பதிவு அமைப்பு அறிக்கை-2017ஐ வெளியிட்டுள்ளன. குழந்தைகள் பிறப்பு பதிவு குறைவாக உள்ள உலகின் முதல் 5 நாடுகளில் இந்தியாவும் உள்ளது என்கிறது யுனிசெப் ஆய்வு. இப்படிப்பட்ட மோசமான செயல்பாட்டில் அரசாங்கமே உள்ள நிலையில் குடியுரிமை, குடிமக்கள் திருத்த சட்டங்களை செயல்படுத்த துடிப்பது தேவையா, நியாயமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

# நாட்டின் பொருளாதார மந்தம் சாதாரணமானது அல்ல... அரவிந்த் சுப்பிரமணியன் மீண்டும் எச்சரிக்கை

இன்று நாடு எதிர்கொள்ளும் நிலையானது, ‘ஒரு சாதாரண பொருளாதார மந்தநிலை அல்ல’ என்று மத்திய அரசின்முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகரான அரவிந்த் சுப்பிர மணியன் எச்சரிக்கை செய்துள்ளார். அரவிந்த் சுப்பிரமணியன், பன்னாட்டு நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) இந்திய அலுவலக முன்னாள்தலைவர் ஜோஷ் பெல்மனுடன் இணைந்து கட்டுரை ஒன்றை கடந்தவாரம் வெளியிட்டிருந்தார். அதில், “வங்கிசாரா நிதி நிறுவனங்களில் காணப்படும் பிரச்சனைகள் உள்ளிட்டவை காரணமாக, இந்தியப் பொருளாதாரம் தீவிர சிகிச்சைப் பிரிவை நோக்கிச் செல்கிறது” என்று கூறியிருந்தார். இந்நிலையிலேயே, ‘இந்தியாவில் நிலவுவது சாதாரணமான பொருளாதார மந்த நிலை அல்ல!’ என்று மீண்டும் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அரவிந்த் சுப்பிரமணியன், பேட்டி அளித்துள்ளார். அதில், மேலும்அவர் கூறியிருப்பதாவது:2011 மற்றும் 2016-க்கு இடையிலான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 2.5 சதவிகித புள்ளிகள் மிகையாக கணக்கிடப்பட்டுள்ளன. ஏற்றுமதி புள்ளி விவரங்கள், நுகர்வோர் பொருட்களின் புள்ளி விவரங்கள், வரி வருவாய் புள்ளி விவரங்கள்- ஆகிய நாட்டு வளர்ச்சியின் வெளிப்பாட்டை குறிப்பிடும் இந்த மதிப்பீடுகள் யாவும் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. 2000மற்றும் 2002-இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 4.5 சதவிகிதமாக இருந்த போதிலும் இந்த குறியீடுகள் அனைத்தும் நேர்மாறானவை அல்ல. அரசாங்க தரவுகளின் படியே இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகளில் கீழ்நோக்கி சென்றுள்ளது. 2019-20 முதல்காலாண்டில் 2 சதவிகிதம் குறைந்து 4.5 சதவிகிதம் ஆகியுள்ளது. இது 2018-19 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 8 சதவிகிதமாக இருந்தது.

எண்ணெய் அல்லாத ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விகிதங்கள் முறையே 6 சதவிகிதம் மற்றும் 1 சதவிதமாக குறைந்துள்ளது. மூலதனப் பொருட்கள் தொழில் வளர்ச்சி 10 சதவிகிதம் குறைந்துள்ளது. நுகர்வோர் பொருட்கள் உற்பத்தி வளர்ச்சி விகிதம் 1 சதவிகிதமாக குறைந்துள்ளது. இரண்டுஆண்டுகளுக்கு முன்பு இது 5 சதவிகிதம் வரை இருந்தது நினைவு கொள்ளத்தக்கது. உண்மையில் பொருளாதாரம் மந்தமாகிறது... வேலை வாய்ப்புகள் குறைந்து வருகின்றன. மக்களின் வருமானம், அவர்கள் பெறும் ஊதியங்கள் குறைந்துள்ளன. அரசு பெறும் வருவாயும் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி(ரிசர்வ் வங்கி), மே மாதத்தில் நடத்திய கணக்கெடுப்பின்போதே, 48 சதவிகிதம் பேர் முந்தைய 12 மாதங்களில் பொதுபொருளாதார நிலைமை மோசமடைந்திருப்பதாக தெரிவித்திருந்தனர். எனவே, இது ஒரு சாதாரண மந்தநிலை அல்ல... இது இந்தியாவின் பெரும் மந்தநிலை என்று அரவிந்த் சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

# விடுதலை இராசேந்திரன் விளக்க உரை (2)

# குடியுரிமைச் சட்டங்கள்: மோடியின் பொய்யுரைகள்

*குடியுரிமைத் திருத்தச் சட்டம் – குடியுரிமை பதிவேடு – தேசிய மக்கள் தொகைப் பதிவேடுகளில் பா.ஜ.க. ஆட்சி அவசரம் காட்டுவது ஏன்? என்பதை விளக்கி ஜனவரி 4, 2020 அன்று, சென்னை தலைமைக் கழகத்தில் நடந்த 'நிமிர்வோம்' வாசகர் வட்டத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை யாற்றினார். அவரது உரையிலிருந்து:* (சென்ற இதழ் தொடர்ச்சி)

முதன் முதலாக இந்த குடியுரிமைச் சட்டம் எப்போது உருவானது? அரசியல் சட்டம் வந்த போது இந்த குடியுரிமை சட்டம் உருவாகவில்லை. குடியுரிமை சட்டங்கள் பற்றி விவாதங்கள் நடந்தன. அம்பேத்கர் அப்போது சொன்னார், 'எதிர்காலத்தில் நாடாளுமன்றம் குடியுரிமை சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள இந்த அரசியல் நிர்ணய சபை அதிகாரத்தை வழங்குகிறது. நாடாளுமன்றம் அதை நிறைவேற்றிக் கொள்ளலாம். குடிமக்களாக யார் இருக்க வேண்டும் என்பதை நாடாளுமன்றம் நிர்ணயித்துக் கொள்ளலாம்' என்று அம்பேத்கர் கூறினார். அதன் பிறகு 1955 ஆம் ஆண்டு குடியுரிமை சட்டம் வருகிறது. பாகிஸ்தான் - இந்தியா பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானிலிருந்து வருகிற இஸ்லாமியர்களுக்கும் இந்தியாவில் வாழ்வதற்கான அனுமதியை அந்த குடியுரிமை சட்டம் கொண்டிருந்தது. பல நேரங்களில் அந்த சட்டம் திருத்தப்பட்டுக் கொண்டே இருந்தது. இதுவரை இஸ்லாமியர்களுக்கு குடியுரிமை இல்லை என்று ஒரு முறை கூட திருத்தப்படவில்லை. இந்த முறைதான் மதத்தின் அடிப்படையில் மக்களை கூறுபோடுகிற ஒரு வேலையை இந்த சட்டம் செய்திருக்கிறது. இதுவரை நடந்த திருத்தங்களில் மதப் பாகுபாடு இல்லை. ஏற்கெனவே 16 இலட்சம் பேர் அசாமிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று நிர்ணயித்த பிறகு இந்தத் திருத்தச் சட்டத்தில் 2014 வரை இந்தியாவில் உள்ளவர்களுக்கு குடியுரிமை கொடுக்கலாம் என்று கூறுவதால் அந்த 16 இலட்சம் பேரில் 9 இலட்சம் இந்துக்களாக இருப்பவர்களுக்கு குடியுரிமை கிடைத்து விடுவதால் அசாமில் போராட்டம் நடக்கிறது.

இந்த குடியுரிமை திருத்த சட்டத்திற்கு என்ன விளக்கம் சொன்னார்கள், இந்தியாவின் அண்டை நாடுகளான, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் இந்த மூன்று நாடுகளை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். இந்த நாடுகளில் இருந்து வருகிற இந்துக்கள், கிருத்தவர்கள், பவுத்தர்கள், சமணர்கள், பார்சி, சீக்கியர்களுக்கு மட்டும் குடியுரிமை என்றார்கள். முஸ்லிம் அல்லாதவர்கள் என்று அவர்கள் சொல்ல வில்லை, யார் யார் வரலாம் என்று சொல்லி விட்டார்கள். பா.ஜ.க.வினர் இப்போது ஒரு வாதத்தை முன் வைக்கிறார்கள். இந்த சட்டத்தில் முஸ்லிம் என்ற வார்த்தையையே பயன்படுத்த வில்லையே எதற்காக எங்களை முஸ்லிம் எதிர்ப் பாளர்கள் என்று கூறுகிறீர்கள்? என்ற கேள்வியை இல. கணேசன் கேட்கிறார். முஸ்லிம்கள் என்ற வார்த்தையை நீங்கள் இந்த திருத்த சட்டத்தில் ஏன் சேர்க்கவில்லை என்பது தான் இதில் உள்ள பிரச்சனையே. முஸ்லிம்களை மட்டும் ஒதுக்கி வைத்துவிட்டு மற்றவர்களுக்கு குடியுரிமை வழங்கி விட்டு, முஸ்லிம்களைப் பற்றி திருத்தச் சட்டம் பேசவே இல்லையே ஏன் எதிர்க்கிறீர்கள் என்பது மக்களை மடையர்களாக மாற்ற நினைக்கும் கேள்வி அல்லவா?

ஆப்கானிஸ்தான் கூட இந்தியாவின் அண்டை நாடு கிடையாது. பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் தான் அண்டை நாடுகள் அங்கிருந்து வருகிறார்கள். அதில் கூட persecuted religious minority - அதாவது துன்புறுத்தப்பட்ட மத சிறுபான்மையினர் என்று சட்டத்தில் கூறாமல், persecuted minority அதாவது மதம் என்ற வார்த்தையை எடுத்துவிட்டு துன்புறுத்தப்பட்ட சிறுபான்மையினர் என்றுதான் சட்டம் கூறுகிறது. மற்றொரு கேள்வி, பக்கத்தில் நேபாளம், பூடான், பர்மா ஆகிய மூன்று நாடுகள் உட்பட தமிழ்நாட்டிற்கு அருகில் இலங்கை உள்ளது. இலங்கையில் இருந்து 35 ஆண்டுகளுக்கு முன்பிருந்து வந்த தமிழர்கள் மூன்று தலைமுறையாக இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று ஜெயலலிதாவே பேசியிருக்கிறார். விரும்புகிறவர்கள் குடியுரிமை வாங்கிக் கொள்ளலாம் அல்லது அவர்களது நாட்டிற்கு செல்லலாம். ஆக இந்தச் சட்டத் திருத்தத்தில் ஈழத் தமிழர்களை விட்டு விட்டார்கள். பூடான், நேபாளம், பர்மா , பூடானிலிருந்து பாதிக்கப்பட்ட இஸ்லாமியர்கள் வந்தால்



அவர்களுக்கு இந்தியாவில் அனுமதியில்லை. பூடானில் கிருத்தவர்கள் மிகக் கொடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். அங்கே கிருத்தவர்களுக்கு பொது இடங்களில் தேவாலயங்கள் கட்ட அனுமதியில்லை. பூடானில் உள்ள ஒரு கிருத்துவர் வழிபாடு நடத்த வேண்டுமானால் இந்தியாவின் எல்லைக்குள் வந்து தான் வழிபாடு நடத்த வேண்டும். ஆப்கானிஸ்தான், பங்களாதேஷில் உள்ள கிருத்துவர்களுக்கு உள்ளே நுழைய அனுமதி கொடுத்த நீங்கள் பூடானில் உள்ள கிருத்துவர்களுக்கு ஏன் அனுமதி கொடுக்கவில்லை? என்ற கேள்வி எழுகிறது. காரணம் ஆர்.எஸ்.எஸ். கூறும் அகண்ட இந்து பாரதத்துக்குள் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் வருகிறது.

குடியுரிமைத் திருத்தச் சட்டம் இப்போது நிறைவேறியிருக்கிறது. தொடர்ந்து குடியுரிமைப் பதிவேடு ஒவ்வொரு மாநிலத்திலும் தயாரிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா தொடர்ந்து பேசி வந்தார். எதிர்ப்புகள் கடுமையாக வந்தன. பா.ஜ.க. கூட்டணி ஆட்சி செய்யும் மாநிலங்கள்கூட குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ஆதரித்ததுபோல் குடியுரிமைப் பதிவேடு தயாரிக்க மாட்டோம் என்று அறிவித்தன. இந்த நிலையில் மத்திய அமைச்சரவை கூடி தந்திரமாக வேறு ஒரு முடிவை எடுத்தது. தேசிய மக்கள் தொகை பதிவேட்டைத் தயாரிக்கப் போவதாக அறிவித்து, அதற்கு 4000 கோடி நிதி ஒதுக்கினார்கள். இது வழக்கமாக நடத்தப்படுகிற மக்கள் தொகைக் கணக்கெடுப்பான 'சென்சஸ்' அல்ல. மக்கள் நலத் திட்டங்களை அமுல்படுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தேவைப்படுகிறது; இப்போது 'ஆதார்' அடையாளமே போதும் என்ற நிலை வந்து விட்டது.

ஆனால் தேசிய மக்கள் தொகை பதிவேடு, 'சென்சஸ்' அல்ல. அடுத்து அவர்கள் எடுக்கவிருக்கும் தேசிய குடியுரிமைப் பதிவேட்டுக்கான முன்னோடி கணக்கெடுப்பு. தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டைத் தொடர்ந்து தேசிய குடியுரிமைப் பதிவேடு தயாரிக்கப்படும் என்பதற்கான சட்டத் திருத்தம் 2003ஆம் ஆண்டில் வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்திலேயே கொண்டு வரப்பட்டுவிட்டது. தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டில் இப்போது புதிதாக சில கேள்விகள் இணைக்கப்பட்டுள்ளன. "உங்களது தாய் தந்தை எப்போது எங்கே பிறந்தனர்? அதற்கான ஆதாரங்கள் என்ன?" - இந்தக் கேள்விகளுக்கு ஆவணங்களை சமர்ப்பிக்க முடியுமா? நிச்சயமாக முடியாது. தங்களின் பிறப்பு சான்றிதழ்களையே நிரூபிக்க முடியாத மக்களைக் கொண்ட நாட்டில் பெற்றோர்களின் இருப்பிடச் சான்றிதழ்களுக்கு பிறப்பு சான்றிதழ்களுக்கு எங்கே போவது? கடும் எதிர்ப்புக்குப் பிறகு இப்போது இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பது கட்டாயம் இல்லை என்கிறது மோடி ஆட்சி. அடுத்து குடியுரிமைப் பதிவேடு தயாரித்தால் நாட்டில் பெரும் குழப்பம்தான் உருவாகும். நான் இந்த நாட்டின் குடிமகன் என்பதை நானே நிரூபித்தாக வேண்டும். அதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் குடிமக்கள் தகுதி நீக்கப்படும்.

வடகிழக்கு மாநிலங்களில் இதற்கான தேவை இருக்கலாம். அவை எல்லையோர மாநிலங்கள். ஆனால், ஏனைய மாநிலங்களில் இதற்கான தேவை அவசியம் என்ன?

அதே போல் பாகிஸ்தானில், அகமதியாக்கள், ஷியாக்கள் என்று முஸ்லிம்களில் வேறு பிரிவுகள் உள்ளன. அகமதியாக்களும், ஷியாக்களும் இஸ்லாமியர்களுக்கு எதிரிகள் என்று பாகிஸ்தான் அரசு கருதுகிறது. அகமதியாக்கள் 'குர் ஆனை' படிப்பதற்கு பாகிஸ்தான் அரசு தடை போட்டுள்ளது. அதே போல் அகமதியாக்கள் எந்த ஒரு விண்ணப்பத்திலும் தங்களை இஸ்லாமியர்கள் என்று பதிவு செய்து கொள்வதற்கு தடை போட்டுள்ளது பாகிஸ்தான் அரசு. ஆக, இஸ்லாமியர்களிலேயே அகமதியாக்கள், ஷியாக்கள் பிரிவினரை துன்புறுத்துவதாக பாகிஸ்தான் அரசு இருக்கின்ற போதிலும் இஸ்லாமியரை இங்கே அனுமதிக்கக் கூடாது என்று தடை போடுவதில் என்ன நியாயம் இருக்கிறது? அதற்கும் இவர்களிடத்திலிருந்து எந்த பதிலும் கிடையாது. கேட்டால் அது இரண்டு மதத்திற்குள் இருக்கும் பிரச்சினை' என்கிறார்கள். அகமதியாக்களை இஸ்லாமியர்கள் எதிரிகளாகவே கருதுகிறார்கள். அவர்கள் தங்கள் நாட்டில் வாழக்கூடாது என்கிறார்கள். அவர்கள் இஸ்லாமியர்கள் என்று அறிவித்துக் கொள்ளக் கூடாது என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு ஒரு கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறவர்கள். அருகிலேயே பர்மா என்று அழைக்கப்பட்ட மியான்மர் நாட்டில் ரோஹிங்கியா என்ற ஓர் இஸ்லாமிய பிரிவு இருக்கிறது. இன்று உலகிலேயே அதிகமான இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்படுகின்ற பிரிவு என்று அய்க்கிய நாடுகள் சபை அறிவித்திருக்கிறது. ரோஹிங்கியா முஸ்லிம்களை மிகவும் சித்திரவதை செய்து கொள்கிறார்கள். உலகிலேயே அதிகமாக இனப்படுகொலை செய்யப்படும் ஒரு இனம் என்று அய்க்கிய நாடுகள் சபை அறிவித்த பின்பும் இந்தியாவில் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு இடமில்லை என்றால். ஏன் மூன்று நாடுகளை மட்டும் மதத்தின் அடிப்படையில் தேர்வு செய்தீர்கள்? பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மூன்றுமே இஸ்லாமிய நாடு. பூடான், மியான்மர் பௌத்தர்கள் வாழும் நாடு. நேபாளம் இந்துக்கள் வாழும் நாடு. ஆக இந்த மூன்று நாடுகளை மட்டும் தேர்வு செய்தது ஒரு அப்பட்டமான மதப் பிளவு ஆகாதா?

அகமதியாக்களும் இஸ்லாமியர்களில் ஒரு பிரிவினர் தான் என்று பேசும் பாரதிய ஜனதா கட்சிகாரர்களைக் கேட்கிறோம், அய்க்கிய நாடுகள் சபையில், இந்தியாவின் பிரதிநிதி என்ன பேசினார்? பாகிஸ் தானில் அகமதியாக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், ஒதுக்கப்படுகிறார்கள் என்று குற்றச்சாட்டு விவாதத்துக்கு வந்தபோது இந்தியாவின் சார்பாக பேசிய பிரதிநிதி, 'பாகிஸ்தானில் அகமதியாக்களுக்கே மிகப் பெரிய கொடுமை நடக்கிறது, அந்த அளவிற்கு பாகிஸ்தானில் இஸ்லாமிய மதவெறி தலைவிரித்தாடுகிறது' என்று பேசினார் இந்திய பிரதிநிதி. ஆனால், அந்த வரலாற்று உண்மைகளெல்லாம் மறந்துவிட்டு இன்றைக்கு இப்படி ஒரு கருத்தை மாற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

பல கட்சிகள் ஆளும் கட்சியை ஆதரிக்கிறவர்கள் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ஆதரித்திருக்கிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமானால், மாநிலங்களவையில் அதிமுகவின் உறுப்பினர்கள் 11 பேர் இதை ஆதரிக்கவில்லையென்றால் இந்தச் சட்டம் நிறைவேறியிருக்காது. ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்படாத ஒரு சட்டத்தை எதிர்க்கக் கூட அவர்கள் தயாராக இல்லை. இந்த சட்டத்தைக் கொண்டு வருகிறபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் திமுகவும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திருத்தம், இந்தத் திருத்தத்தை மதத்தின் அடிப்படையில் தீர்மானிக்காதீர்கள் என்பது ஒன்று; ஈழத்தில் இருந்து வருகிறவர்களுக்கும் குடியுரிமை வழங்க வேண்டும் என்ற திருத்தம் மற்றொன்று. குறைந்தபட்சம் இந்த திருத்தத்திற் காவது அகில இந்திய அண்ணா தி.மு.க.காரர்கள் ஆதரித்திருக்கலாம். ஆனால் அதை செய்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. வாக்களித்து விட்டார்கள். அடுத்த நாளே அது குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு சட்டம் நிறைவேறி விட்டது.

குறிப்பாக உத்திரப்பிரதேசம், ஜமாலியா பல்கலைக்கழகம், அலிகார் பல்கலைக் கழகம் போன்றவைகள் மட்டுமல்லாமல் வீடு வீடாக சென்று கொடூரமாக போராட்டக்காரர்களை தாக்கினார்கள் உத்திரப்பிரதேசத்தில் 19 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். 19 பேரும் இஸ்லாமியர்கள். மோடி என்ன கூறினார் - போராட்டம் நடத்துகிறவர்கள் யார் என்று அவர்கள் அணிந்திருக்கிற ஆடையை வைத்தே புரிந்து கொள்ள முடியும். ஏனென்றால் இஸ்லாமிய உடையணிந்து, குல்லா போட்டுவந்தால் போராட்டம் நடத்துகிறவர்கள் இஸ்லாமியர்கள் தான் என்று மறைமுகமாக கூறுகிறார். உத்திரப்பிரதேசத்தில் மாவட்ட காவல்துறை அதிகாரியாக இருக்கிற ஒருவர் போராட்டம் நடத்துகிற மாணவர்களை பாகிஸ்தானிற்கு ஓடி விடுங்கள் என்று கூறியது சமூக வலைதளங்களில் அதிகளவில் பகிரப்பட்டு பரவியது. இவ்வாறு பரவிய பின் அவர் சொல்கிறார், கூட்டத்தில் இருந்து பாகிஸ்தான் வாழ்க என்று ஒருவர் முழக்கமிட்டார். அதனால் அப்படி கூறினேன்' என்று ஒரு அய்.பி.எஸ் அதிகாரி விளக்கமளிக்கிறார். ஒருவேளை அப்படி ஒரு முழக்கம் ஒருவரால் எழுப்பப்பட்டால் அவரைக் கண்டறிந்து என்ன வழக்கு போட முடியுமோ அதைப் பதிவு செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, பாகிஸ்தானிற்கு ஓடுங்கள் என்று மொத்த மாணவர்களையும் பார்த்து ஆர்.எஸ்.எஸ் குரலில் பேசுவது ஒரு அதிகாரியின் வேலை தானா?

- தொடரும்

– புரட்சிப் பெரியார் முழக்கம் 23.01.2020

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## கோவை இராமகிருட்டிணனை வழக்கிலிருந்து விடுவிக்க சுயமரியாதைப் பிச்சார நிறுவனம் ஒப்புதல்

# ‘குடிஅரசு’ வழக்கு விசாரணை தொடங்கியது

சென்னை உயர்நீதிமன்றத்தில் பெரியார் திராவிடர் கழகம் சார்பாக குடிஅரசு தொகுதிகள் வெளியிட்டதற்கு எதிராக பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் செயலாளர் கி வீரமணி அவர்கள் தொடர்ந்த வழக்கின் விசாரணை சென்னை உயர்நீதிமன்றத்தில் 03.01.2020 அன்று சாட்சி விசாரணைப் பதிவு Master Court இல் நடைபெற்றது.

இவ்வழக்கில் ஏற்கனவே பெரியார் திராவிடர் கழகம் தான் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு இருந்தது. அதன் தலைவர் என்ற அடிப்படையில் கொளத்தூர் மணி மற்றொரு பிரதிவாதியாக கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் சேர்க்கப் பட்டிருந்தனர். இந்த வழக்கில் இரண்டாவது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு இருந்த கோவை. கு. இராமகிருட்டிணன் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்டு அவர் மீதான வழக்கினை பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் செயலாளர் கி. வீரமணி திரும்பப் பெற ஒப்புக் கொண்டார். அதன் காரணமாக கோவை இராமகிருட்டிணன் இந்த வழக்கிலிருந்து 20.10.2019 அன்று விடுவிக்கப்பட்டு விட்டார். எனவே தற்போது கொளத்தூர் மணி மட்டும் இவ்வழக்கில் பிரதிவாதியாக இருக்கிறார்.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் சார்பில் கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்கள் கடந்த 17.12.2019 அன்று சாட்சியளித்தார். சாட்சியத்தின் மீதான குறுக்கு விசாரணை ஜன. 3ஆம் தேதி நடைபெற்றது. குறுக்கு விசாரணையின் போது பெரியார் திராவிடர் கழகத்தின் அன்றைய தலைவர் கொளத்தூர் மணியின் சார்பாக மூத்த வழக்கறிஞர் செ. துரைசாமி மற்றும் வழக்கறிஞர் வி.இளங்கோவன் ஆகியோர் ஆஜராகினர்.

மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி ஏறத்தாழ இரண்டு மணி நேரம் குறுக்கு விசாரணை செய்தார். அந்த விசாரணையின்போது பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், 1952ஆம் ஆண்டு திருச்சியில் 1860 ஆம் ஆண்டைய சொசைட்டி பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது; அந்தப் பதிவு உரிய அதிகாரம் பெற்ற அதிகாரியின் முன்பதிவு செய்யப்படாததால் பதிவு செல்லாது என்று குறுக்கு விசாரணையில் உறுதி செய்தார். அத்தகவல் ஒரு அதிர்ச்சியான உண்மையாக இருந்தது. எனவே பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனமே ஒரு சட்டபூர்வமான நிறுவனம் இல்லை என்பதால் இந்த வழக்கு அடிப்படையற்றது என்பதாகத்தான் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

மேலும் சாட்சியை (கலி.பூங்குன்றன் அவர்களை) வரும் 08.01.2020 அன்று மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி குறுக்கு விசாரணை செய்ய இருந்ததை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில்**
**திருச்செங்கோடு கழகத் தோழர் மனோஜ் சேகரித்த தகவல்**

# சென்னை–திருப்பூரில் தமிழர் திருநாள் விழா எழுச்சி

**சென்னை** இராயப்பேட்டையில் ஜன.13 அன்று தமிழர் திருநாள் விழா நிகழ்வுகள் கலை நிகழ்வுகளுடன் எழுச்சியோடு நடந்தன. விளை யாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற் றோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழா நிகழ்ச்சிகளின் படங்களில் சில:







**திருப்பூரில்** திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழா 16.1. 2020 அன்று வீரபாண்டி பிரிவு பெரியார் படிப்பக திடலில் நடைபெற்றது. காலை 10 மணியளவில் திருப்பூர் கழகத் தோழர் சரஸ்வதி பொங்கல் வழங்கி நிகழ்வினை துவக்கி வைத்தார். தொடர்ந்து குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. விளையாட்டு போட்டிகளை அமுதம் கணேசன், லட்சுமணன், தனபால் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். மாலை 6 மணிக்கு குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் தொடங்கியது. கிராமிய பாடல் களுக்கு விஷாலிகா, அனுஸ்ருதா, கீர்த்திகா, கீர்த்தனா, வரதன், வயிரவன், வேல் ஆகிய குழந்தைகள் நடனமாடினர். பாரதிதாசன் கவிதைகளை இளைய பாரதி பாடினார்.



பெரியாரை பற்றியும் நீட் தேர்வு அவலத்தைப் பற்றி யும் அறிவுமதி பேசினார். சிலம்பக் கலையை அறிவுமதி செய்து காட்டினார். பூங் குன்றன் திருக்குறளையும் பெரியார் பாடல்களையும் பாடினார். பெரியார் பாடல்களை யாழினியும் யாழிசையும் பாடினர்; பிரபாகரன் நடனம் ஆடினார். மேடை நிகழ்விற்கு மாவட்ட செயலாளர் நீதிராசன் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் மேட்டுப்பாறை சுப்பராயன், வீரபாண்டி பகுதி திமுக செயலாளர் முருகேசன், 40 வது வட்ட திமுக சீனிவாசன், 52வது வட்ட திமுக வேலுச்சாமி, திராவிடர் இயக்க தமிழர் பேரவை அரங்கசாமி, வீரபாண்டி பகுதி அதிமுக கதிர்வேல் ஆகியோர் பங்கேற்றனர். மாவட்ட அமைப்பாளர் சங்கீதா வரவேற்புரையாற்றினார் தொடர்ந்து தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் குமார், கோவை மாவட்ட தி.விக தலைவர் ராமசந்திரன், கோவை மாவட்ட செயலாளர் வெள்ளியங்கிரி, தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் சிவகாமி, சிவகங்கை மாவட்ட தலைவர் காரைக்குடி முத்து, தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சேர்ந்த சந்தோஷ், திவிக மாநில பொருளாளர் சு.துரைசாமி, திவிக திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு ஆகியோர் உரையாற்றினர். விளையாட்டு போட்டிகளுக்கான பரிசினை வழங்கி கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். நிகழ்விற்கு அய்யப்பன் நன்றியுரையாற்றினார்.

மேலும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் அகிலன், விஜயகுமார், முத்துகுமார், இராசசிங்கம், இராமசாமி, சண்முகம், சண்.பாண்டியநாதன், கோவிந்தராசு, செம்பரிதி, கனல்மதி, சரண்யா.

## கழக ஏட்டுக்கு கரு. அண்ணாமலை ரூ.5000 நன்கொடை

எம்.ஜி.ஆர். நகர் கழகப் பொறுப்பாளரும் தலைமைக் குழு உறுப்பினருமான கரு. அண்ணாமலை, சென்னையில் ‘தோழர் உணவகம்’ என்ற உணவகத்தைத் திறந்துள்ளார். அதன் மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.5000/- நன்கொடையை கழகத் தலைவர், பொதுச் செயலாளரிடம் முழக்கம் உமாபதி-பிரியா மணவிழா நிகழ்வில் வழங்கினார்.

## ‘முழக்கம்’ உமாபதி – பிரியா ஜாதி மறுப்பு மண விழா



திராவிடர் விடுதலைக் கழகத் தோழரும் புரட்சிப் பெரியார் முழக்கம் ஏட்டில் எட்டு ஆண்டு காலம் பொறுப்பாளராகப் பணி புரிந்த வருமான ‘முழக்கம்’ உமாபதி - சி.பிரியா, ஜாதி மறுப்பு வாழ்க்கை இணையேற்பு விழா 19.1.2020 ஞாயிறு மாலை 7 மணியளவில் மயிலாப்பூர் சிசுவிஹார் சமுதாய நலக் கூடத்தில் சிறப்புடன் நடந்தது. மணவிழாவுக்கு பேராசிரியர் சரசுவதி தலைமை தாங்கினார். பேராசிரியர் மங்கை வரவேற்புரை நிகழ்த்தினார். கோவை இசை மதி, பெண்ணுரிமைப் பாடல்களைப் பாடினார். பெண்ணிய, பெரியாரிய வரலாற்று ஆசிரியர் வ. கீதா வாழ்த்துரை வழங்கினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உறுதிமொழி கூறி மணவிழாவை நடத்தி வைத்தார். கழகத் தோழர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஏராளமாகத் திரண்டு வந்து வாழ்த்தினர். மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.1000/- நன்கொடையை மணமக்கள் வழங்கினர்.

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
**சிந்தாமணி சில்க்ஸ்**
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர் & மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 24th January 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN